முருகப்பெருமான் துணை

**மகான் அகப்பைச்சித்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**06.07.2021**, செவ்வாய்கிழமை

1. அகப்பேயாம் மாயை சிக்கலை
அகிலத்தில் அகற்றி காக்கும்
மகா சக்தியாக வந்த ஞானி
மாதவசி அரங்கன் கேட்க
2. கேட்கவே துல்லிய ஆசிதனை
கூறிடுவேன் அகப்பைச்சித்தர் யானும்
திட்டமுடன் பிலவ மிதுன திங்கள்
தக்க இருபானீர் திகதி குசன் வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் **22**ம் நாள், **06.07.2021** செவ்வாய்கிழமை)
3. வாரமதில் உலகோர் தெளிவுற
வழங்குவேன் வழிகாட்டலாக
சோரமான மும்மலக் குற்றங்களில்
செகத்தார் அகப்பட்டு பிறவிபல தொடர
4. தொடருகின்ற இவை துன்பம்
தொலைந்தோடி பிறவி கடக்க
சுடரேற்றி அருளும் அரங்கன்
சூட்சும பலமிக்க ஆசி தீட்சை
5. தீட்சை அடைந்து உலகோர் வர
தொடர்ந்து ஞானம் பயில
கட்டமான நிலைகள் விலகி
கலியில் தெளிவுதிடம் கூடி
6. கூடியே குருவாக அரங்கன் தரும்
குருபரன் மகாமந்திர உபதேசம்
ஈடேற்றி கடைத் தேற்றம் தரும்
இடைகண்டம் அல்லல் பற்றா
7. பற்றாத பாதுகாப்புமிக்க வாழ்வாய்
பாருலகோர் அடைந்து சிறப்பர்
உற்றதொரு ஓங்கார ஞானி
உண்மை வழிகளை எடுத்துரைத்து
8. உரைத்துமே தொண்டாற்றியே
உலகமெங்கும் சேவை வளர
குறைவின்றி இணைந்து மக்கள்
குருவரங்கன் தொண்டர்களாக வர
9. வருகவே மக்களுக்கு சக்தி
வரமாக உலகினில் கிட்டி
வருமுலகில் உலகமாற்றத்துக்கு
வழிவகை செய்யும் என்பேன்

10. என்கவே அரங்கனுக்கு பலமாக
என் சக்தியும் இணையவே
நன்மை கருதி வரும் மக்கள்
ஞானவான்களாக புதுமை அடைவதுடன்

11. அடைவதுடன் உலகை மாற்றும்
ஆக்க ஞான சக்தி பெருகி
தடைநீக்கி ஞான ஆட்சிதருவர்
தவராசனுக்கு விளம்பிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–